மட்டுமல்ல, விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 250; சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 150; கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 200; கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 250; மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 250. ஆக 1,325 பேருந்துகள் வாங்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 91, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

91—

பேருந்து வசதி

***18009–செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதிக்குள்ளிட்ட பகுதியில் பழுதடைந்த நிலையில் ஓடும் அரசுப் பேருந்துகளை மாற்றி, நல்ல நிலையில் உள்ள புதிய பேருந்துகளை இயக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதிக்குள்ளிட்ட பேரணாம்பட்டு பணிமனையிலிருந்து இயக்கப்படும் எந்தப் பேருந்தும் பழுதடைந்த நிலையிலோ, வயது முதிர்ந்த நிலையிலோ இல்லை. ஆறு மாதத்திற்கு ஒரு முறை அனைத்துப் பேருந்துகளும் புதுப்பிக்கப்பட்டு, தகுதி மற்றும் சாலைத் தகுதிச் சான்று போக்குவரத்து ஆய்வாளரிடம் பெறப்பட்டு, நல்ல நிலையில் தடத்தில் இயக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

2004 ஜூலை 30]

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னையின் உலகத்தின் அமுத சுரபியே, அருள் ஆட்சி வழங்கும் அன்னையே, அன்பு நதி தீரமே, நீவிர் அமர்ந்திருக்கும் திசை நோக்கி வணங்கி, குடியாத்தம்–பெங்களூர் சாலை, காஞ்சிபுரம்–பெங்களூர் சாலை போன்ற பேருந்துச் சாலைகள் மிக மோசமான நிலையில் உள்ளதால், அச்சாலைகளில் செல்கின்ற பேருந்துகள் அடிக்கடி நின்று விடுகின்றன. இந்தச் சாலைகள் சீர் செய்யப்பட்டு, புதிய பேருந்துகள் இயக்கப்பட்டால் அரசுக்கு வருவாய் அதிகரிக்கும். எனவே, குடியாத்தம்–பெங்களூர் சாலையில் செல்லும் தடம் எண் 441 ஜி பேருந்துகளும், காஞ்சிபுரம்–பெங்களூர் சாலையில் செல்லும் தடம் எண் 666 பேருந்துகளும் புதிய பேருந்துகளாக மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய நான் விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்பு சொன்ன பதிலிலே இதற்குரிய விடையும் அடங்கி இருக்கிறது என்று கருதுகிறேன். இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி புதியதாக வாங்கப்பட இருக்கின்ற, 1,325 பேருந்துகளில், 250 பேருந்துகள் விழுப்புரம் போக்குவரத்துக் கோட்டத்திற்கு வழங்கப்பட இருக்கின்றன. விழுப்புரம் கோட்டத்திலே உள்ளடங்கிய பேரணாம்பட்டு தொகுதிக்கும் அதிலே, தேவைக்கேற்ப நிச்சயமாகப் புதிய பேருந்துகள் வழங்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கி வந்த போக்குவரத்துத் துறையை, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது சீரிய முயற்சியினாலே, இலாபத்தில் இயங்கக்கூடிய நல்லதொரு நிறுவனமாக மாற்றி இருக்கிறார்கள். தனியார் பேருந்துகளில் பயணிகளைக் கவர்வதற்காக பல்வேறு வசதிகளை எல்லாம் ஏற்படுத்தி இருக்கிறார்கள். குறிப்பாக Hi–tech bus–கள் மட்டும் அல்லாமல், நவீன தொலைக்காட்சிகளும், வீடியோ வசதிகளும், ரேடியோ வசதிகளும், சில தனியார் பேருந்துகளிலே செல் ஃபோனிலே பேசுகின்ற அந்த வசதிகளைக்கூட இப்போது உருவாக்கியிருக்கிறார்கள். அதேபோல, பயணிகளைக் கவர்வதற்கு — இலாபத்தை இன்னும் அதிகமாக்குவதற்காகப் பயணிகளைக் கவர்கின்ற நோக்கிலே —

கட்டணங்களைக் கொடுத்துவிட்டு, செல் ஃபோன் பேசுகின்ற வசதிகளும் மற்றும் தொலைக்காட்சி, ரேடியோ வசதிகளும் எல்லா அரசுப் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளில் தொலைக்காட்சி மற்றும் படக்காட்சி வசதிகளோடு, ஒலிநாடா மூலம் இசைப் பாட்டுகள் எல்லாம் ஒலி பரப்பப்படுகின்றன. அதேபோன்று, இப்போது அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் தனியார் பேருந்துகளுக்கு இணையாக, அந்த அளவுக்கு, தொலைக்காட்சிகள் எல்லாம் ஆங்காங்கு — புதிய பேருந்துகளில், தேவையான பேருந்துகளில் தேவையான அளவுக்கு வீடியோ படக் காட்சிகள் — காண்பிக்கப்படுகின்றன என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வசதியான செல் ஃபோன் வசதியும் செய்யப்படுமா என்பதைக் கேட்டிருக்கிறார்கள். இதைப் பொறுத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், அறந்தாங்கியிலே இருந்து போபால் நகருக்கு எப்போது பேருந்து விட இருக்கிறார் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவு தூரம் போனால் உடம்புக்குத் தாங்காது! *(சிரிப்பு)*

வினா எண் 92, திரு. டி. மணி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

92—

ரப்பர் பூங்கா

***6073—திரு. டி. மணி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—